Registered as a News paper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 1 2-2-1985 சனிக்கிழமை (தை 20-ஜ. ல் 11) முழக்கம் 192

## மட்டுநகர் கச்சேரியில் தேசியக் கொடிகள் கொள்ளை !

(மட்டுநகர்)

மட்டுநகர் அரசாங்க செயலகப் பாவிப்பிற்கு வந்த தேசியக்கொடிகளை இனம் தெரியாதவர்கள் நேற்றுக் கொள்ளையடித்துச் சென்றனராம். வெளியிடமொன்றிலிருந்து நான்கு பார்ஸல்களில் இவை வந்ததாகவும், சுமார் தொண்ணூறு தேசியக் கொடிகள் இதற்குள் இருந்ததாகவும் தெரிய வந்துள்ளது நாளை மறுதினம் சுதந்திர தினத்தன்று மட்டுநகர் கச்சேரியில் பாவிப்பதற்கும், அதனுடன் இணைந்த அலுவலகங்களை அலங்கரிக்கவும் இவை பெறப்பட்டனவாம்.

★ இ. தொ. கா.வின் முக்கிய முடிவுகள் எடுக்கும் கூட்டம் இன்று :

# தொண்டா: அநியாயக்கொலைகள் இம்சைகளைப் பார்த்திருப்பதா?

## இருபதாயிரம் இந்திய வம்சாவழியினர் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனராம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும், தமிழ் மக்கள் அடைந்துவரும் இன்னல்கள் பற்றியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மிக முக்கியமான சில முடிவுகளை இன்று எடுக்கவுள்ளது. "நாம் என்ன முடிவை எடுப்போம் என்பது இன்று பிற்பகல் தெரிந்துவிடும்" என்று தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமிய கைத்தொழில் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் நேற்றிரவு ஈழமுரசுக்கு தெரிவித்தார். இன்றைய கூட்டம் இந்த முடிவை எடுக்கும்.

அமைச்சர் அண்மையில் புதுடில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துவிட்டு திரும்பிய பின்னர் அவரது அரசியல் போக்கில் 'தீவிரம்' இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர் இதுபற்றி அமைச்சரிடம் கேட்டபோது தமிழர்கள் இம்சிக்கப்படுவதையும், கொல்லப்படுவதையும் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா' என்று திருப்பிக் கேட்டார்.

மிகவும் முக்கியமான நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் உயர்பீடக் கூட்டம் இன்று நடைபெறுவதால் அனைவரதும் கவனத்தையும் ஈர்க்கும் சிலமுடிவுகளை இன்றைய கூட்டம் எடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளில் குடியேறிய சுமார் இருபதாயிரம் இந்திய வம்சாவழியினர் அங்கிருந்து துப்பாக்கி முனையில் வெளியேற்றப் பட்



— 4-ம் பக்கம் பார்க்க

## மட்டுநகர் மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பு

(மட்டுநகர்)

மட்டுநகரின் பெரும்பாலான பாடசாலைகளையும் மாணவ, மாணவிகள் நேற்றுப் பகிஷ்கரித்தனர்.

மட்டக்களப்பு நகர் உட்பட, மண்டூர், ஆரையம்பதி, தம்பலவத்தை ஆகிய கிராமங்களில் பெரும் தொகையான பாடசாலை மாணவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டிப்பதற்காகவும், ஆட்சேபம் தெரிவிப்பதற்காகவுமே இப் பகிஷ்கரிப்பு நடத்தப்பட்டதாக மாணவர் பிரதிநிதிகள்

—4ம் பக்கம் பார்க்க

## டீசல் இல்லை; பஸ்ஸும் இல்லை

டீசல் தட்டுப்பாடு காரணமாக நேற்றுக் காலை வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன பின்னர் இராணுவ பாதுகாப்புடன் டீசல் வழங்கப்பட்டதை தொடர்ந்து மீண்டும் பகல் பஸ் சேவைகள் வழமையாக நடைபெறுறன.

## பெண் உடபட மூவர் கடத்தல்

மன்னாரில் மடு வீதியில் மூவரை தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் பெண் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது எதற்காக கடத்தப்பட்டார்கள் என்ற விபரம் எதுவும் தெரிவிக்கப் படவில்லை.

## மூதூரில் ஐந்து கொலைகள்; மரணதண்டனை; கொள்ளை!

(திருமலை)

மூதூர் பகுதியில் நடைபெற்ற ஐந்து கொலைகள். ஒரு மரணதண்டனை, மற்றொரு கொள்ளைச் சம்பவம் ஆகியன பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது,

சம்பூரில் பதினான்கு வயதுச் சிறுவனான கந்தசாமி உட்பட சீராளன், தவராஜா, சந்திரலிங்கம், தம்பையா ஆகிய ஐவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கூனித்தீவில் பொன்னுத்துரை என்பவரின் வீட்டில் பணம் நகை ஆகியன நேற்றுக் கொள்ளையடித்துச் செல்லப் பட்டுள்ளன.

கிளிவெட்டியில் 'காட்டிக் கொடுப்பவா' என்ற சந்தேகத்தின் பேரில் சிவானந்தம் என்பவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் நடந்த மற்றொரு துணிகர சம்பவம்!

## கடத்தப்பட்ட நான்கு பவுஸர்களில் பெற்ரோல், டீசல், ஆயில் கொள்ளை

யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்குள் நேற்று முன்தினம் இரவு நான்கு பவுசர்களிலும், ஒரு ஜீப், வான் ஆகியவற்றிலும் சென்ற பல இளைஞர்கள், ஒரு பவுஸர் டீசல், மூன்று பவுசர் பெற்ரோல், ஒரு பரல் ஆயில் ஆகியவற்றை துப்பாக்கி முனையில் துணிகரமாக நிரப்பிக் கொண்டு சென்றுள்ளார்கள்.

இதற்கு முன்னர், கல்வியங்காட்டிலுள்ள தனியார் நிலையமொன்றிலும் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சுன்னாகத்தில் உள்ள தனியார் ஒருவரது பெற்ரோல் நிலையம் ஆகியவற்றில் இருந்தே பவுசர்களும், பவுசர் ராங்குகளும் துப்பாக்கிகளுடன் வாகனங்களில் வந்த இளைஞர்களால் கடத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் இரவு யாழ். பெற்ரோலியக் கூட்டுத்தாபன ஸ்ரான்லி வீதி நிலையத்

—4ம் பக்கம் பார்க்க

## பேராதனை மாணவர்களுக்கு 6-ம் திகதி விசேஷ பஸ் சேவை

பேராதனை பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் யாழ்ப்பாண மாணவர்களுக்கான விசேஷ பஸ் சேவை எதிர்வரும் புதன்கிழமை 6ம் திகதி நடாத்தப்படும். யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் மேற்கொண்ட விசேஷ நடவடிக்கையின் பயனாக 6ம் திகதி காலை 6 45 மணிக்கு விசேஷ பஸ் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து புறப்படும்.

இது வரை 58 மாணவர்

—4-ம் பக்கம் பார்க்க

## நான்கு மாவட்டங்களில் மட்டும் நடை பெறும்!

## பாதிக்கப்பட்ட ஜீ. சி. ஈ. (சாதா) பரீட்சையை இம் மாதம் 20 முதல் 28 வரை நடத்த முடிவு!

ஜீ. சி. ஈ. சாதாரண தர பரீட்சையை இம் மாதம் 20ம் திகதி முதல் 28ம் திகதி வரை நடாத்துவதற்குப் பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. கடந்த டிசம்பர் மாதம் பரீட்சை எடுக்க முடியாமற் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இப் பரீட்சை நடைபெறுமென தெரிய வந்துள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்றை யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு.எம். சிமியாம்பிள்ளை நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தினர்.

கல்வித் திணைக்கள உத்தி

4—ஆம் பக்கம் பார்க்க

## இவைகளுக்குத் தணிக்கை

1985(1) அவசரகால சட்ட விதிகளின் கீழ் பயங்கரவாத நடவடிக்கைகள், வன்முறைகள், ராணுவச் சேவைகள மற்றும் பொலிஸார் சம்பந்தப்பட்ட பந்தோபஸ்து நடவடிக்கைகள், இவர்களது பயிற்சிகள் பற்றிய செய்திகள், ஆசிரிய தலையங்கம், கட்டுரைகள், ஆசிரியர் கடிதங்கள், கேலிச் சித்திரங்கள், குறிப்புரைகள், விளம்பரங்கள், படப்பிரதிகள், சித்திர விளக்கங்கள், புகைப்படங்கள். திரைப்படங்கள் ஆகியன தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரிக்க வேண்டுமென்னும் ஒழுங்கு நேற்று முதல் ராஜாங்க அமைச்சினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

## பிரான்ஸ் தூதுவர் திருப்பி அழைப்பு

இந்தியாவிற்கான பிரான்சின் தூதுவர் நேற்றுத் திருப்பியழைக்கப்பட்டுள்ளார். இரண்டு தினங்களுக்கு முன்னர் பிரான்சில் வெளியுறவு அமைச்சர் டாரீஸிலுள்ள இந்தியத் தூதுவருடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளையடுத்தே இந்த நடவடிக்கை இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## பொறியியல் பரீட்சைகள் 16,17ம் திகதிக்கு ஒத்திவைப்பு

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல்பீட மாணவர்களுக்கு இம்மாதம் 9ம், 10ம் திகதிகளில் நடைபெறவிருந்த பரீட்சைகள் ஒரு வாரம் பின் போடப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இம்மாதம் 16ம், 17ம் திகதிகளில இப் பரீட்சை நடைபெறும் யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்கள் 6ம் திகதி இங்கிருந்து செல்வதாலேயே இந்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## பூஸா இளைஞர் நூறு பேர் விரைவில் விடுதலை பெறுவர்

பூஸாவிலிருந்து மேலும் நூறு இளைஞர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர். இவர்கள் இரண்டு பிரிவாக விடுதலை செய்யப்படுவர்.

—4-ஆம் பக்கம் பார்க்க

# யாழ். மாநகர சபையின் இலாகாக்கள் இடமாற்றம்

யாழ். மாநகர சபை மண்டபத்தின் மேற்குப் பக்கக் கட்டடத்தில் இயங்கிவரும் சுகாதாரப் பகுதியை அங்கிருந்து காலி செய்து நகர மண்டபக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இதே கட்டடத்தின் மேல்மாடியில் இயங்கிவந்த அரசாங்க கணக்காய்வுத் திணைக்களத்தின் யாழ் கிளை அலுவலகம் மாநகர சபையின் சபாமண்டபத்திற்கு ஏற்கனவே மாற்றப்பட்டு விட்டது.

சபையின் சபாமண்டபம் சபைக்கூட்டங்களை மட்டும் நடத்துவதற்கே உபயோகிக்கப்படவேண்டியதென்றும் கணக்காய்வுப்பகுதி அங்கு மாற்றப்பட்டிருப்பதால் சபா மண்டபத்தின் மாண்பும் கௌரவமும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மாநகரசபை வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

மாநகர சபை மண்டபத்தின் மேற்கு பகுதியிலிருந்து சிறிது தூரத்தில் பொலிஸ் நிலையம் அமைந்திருப்பதால் பாதுகாப்புக் கருதியே மேற்படி இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## வரி விளம்பரம்

### ஸ்ரீ சக்கரம்

எவ்வித கஷ்ட நிவாரண நிவிர்த்திகளுக்கும் சகலவித சௌபாக்கிய விருத்திகளுக்கும் சாஸ்திர முறைப்படி செய்யப்பெற்று பூசையில் வைக்கப்பெற்ற ஸ்ரீ சக்கரம் பெற்றுக் கொள்ளலாம்.

— ஏலவிற்பனை நிலையம்
கோப்பாய்

### தேவை

பெண் காசாளர் தேவை சம்பளம் ஏனையவிபரம் நேரில். மனோகரா லோன்றி, பழைய பூங்காவீதி தொடர்பு:- திருமதி நடராசா 108/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

### விற்பனைக்கு

தெல்லிப்பளை ஸ்ரேஷன் றோட்டுக்கு அருகில் மூன்றரைப் பரப்புக் காணியுடன் வீடு, கிணறு, கக்கூஸ் உட்பட விற்பனைக்குண்டு — பரஞ்சோதி நடராத்தினம், புளியந் தோட்டம், சுன்னாகம்.

### சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் Processing and Printing செய்து கொள்ளநாடுங்கள் - கொழும்பு ஸ்ரூடியோ யாழ்ப்பாணம்.

## உப்புக்கும் தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னாரில் உப்புக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கருவாடு உற்பத்தி செய்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் உப்புக் கூட்டுத்தாபனத்தில் கையிருப்பிலிருந்த உப்பு முடிவடைந்து விட்டதாலேயே உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## அறிவித்தல்

சங்கானை மக்களுக்கோர் அறிவித்தல் ஈழமுரசு பத்திரிகை எம்மிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

கமலா ஸ்ரோர்ஸ்
தேவாலய வீதி
சங்கானை

## காணிக்கைமாதா உற்சவம்

(குருநகர்)

குருநகர் காணிக்கை மாதா கோவில வருடாந்த உற்சவம் இன்றுடன் எந்தவித ஆடம்பரமும் இன்றி முடிவடையும். அதிகாலை ஐந்தரை மணிக்கும் ஆறு மணிக்கும் திருப்பலிப் பூசை ஒப்புவிப்பதுடன் திருநாள் கூட்டுத் திருப்பலிப் பூசை காலை ஏழுமணிக்கு நடைபெற்று முடிவடைந்ததும் சொரூப ஆசீர்வாதத்துடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவு பெறும்.

நாட்டுநிலைமை கருதியும், ஊரடங்குச் சட்டம் காரணமாகவும் மாலையில் வழக்கமாக நடைபெறும் தேர் சுற்றுப் பிரகாரம் இம்முறை நடைபெறமாட்டாதென பங்குத்தந்தை வண-பிதா பீற்றர் துரைரத்தினம் அறிவித்துள்ளார்.

## ஆலய உற்சவம்

(மிருசுவில்)

கடந்த 24ம் திகதி கொடியேற்றத்துடன ஆரம்பமான மிருசுவில் புனித காணிக்கை மாதா ஆலய உற்சவம் இன்றுடன் எளிமையான முறையில் கொண்டாடப்படும் நாட்டின் நிலைமை அனுசரித்தும், வங்காலையில் அருள் திரு மேரி பஸ்ரியன் அடிகளார் படுகொலை செய்யப்பட்டதை கருத்தில் கொண்டும் இம்முறை இவ் ஆலய உற்சவத்தினை ஆடம்பரமற்ற முறையில் எளிமையாகக் கொண்டாடும்படி மேற்படி பங்கு மக்களை மிருசுவில் பங்குத் தந்தை அருள் திரு அமிர்த குமார் அடிகளார் கேட்டுள்ளார்.

## பனந்தும்பு தொழிற்சாலை

(கண்டிக்குளி)

பூநகரியில் பனை மூல வளத்தைத் தொழில் மயமாக்கும் முகமாகப் பனந்தும்புத்தொழிற்சாலையொன்று விரைவில் நிறுவப்படவுள்ளது பூநகரி தாடியடியில் இப்பனந்தும்புத் தொழிற்சாலையை அமைப்பதற்கான நடவடிக்கைகளைப் பூநகரி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கம் துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

இலங்கைப் பனை அபிவிருத்திச் சபையின் ஊக்குவிப்பு உதவிகளுடன் இத்தும்புத் தொழிற்சாலை பெப்ரவரிமாத நடுப்பகுதியில் செயற்படத் தொடங்கும்.

## றால் கணவாய் விலை வீழ்ச்சி

(குருநகர்)

எரிபொருள தட்டுப்பாடு தூர இடங்களுக்கு பொருட்களை எடுத்துச் செல்ல வாகன உரிமையாளர்களும் சாரதிகளும அஞ்சுவது போன்றவற்றால் குருநகரில் இயங்கி வருகின்ற றால, மீன், கணவாய் பதனிடப்படுகின்ற தொழில் நிலயங்கள் இயங்காமல் ஓரிரு மாதங்களாக மூடிக்கிடக்கின்றன.

இதனால் றால், மீன், கணவாய் போன்ற கடல்படு மச்சங்களுக்கான விலைகளிலும் பெரும வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.




✻ நெடுந்தீவு கிழக்கு மகாலிங்கம் ருக்குமணி தம்பதிகளின் மகன் தியாகர் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ திருநெல்வேலி கிழக்கு கதிரவேலு மனோன்மணி தம்பதிகளின் மகள் தயானி இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொக்குவில் நடராசா ரோகினி தம்பதிகளின் மகள் கஸ்தூரி இன்று தனது நாலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ சுண்டுக்குளி சிதம்பரநாதன் பத்மினி தம்பதிகளின் மகள் சமிலா இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

✻ யாழ்—சென் பற்றிக்ஸ்வீதி அன்ரனி கிறிஸ்ரி தமபதிகளின் மகன் மரியடிமலாசன் இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## இப்படி ஒரு வேண்டுதல்

(புலோலி)

தென்னிலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இலங்கை வங்கி மக்கள்வங்கி ஆகியன தமது நிதியிலிருந்து அபிவிருத்தி நன்கொடைகளை வழங்குவது போல யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளிலுமுள்ள பல்கலைகழகங்களுக்கு இலங்கைவங்கி மக்கள் வங்கி ஆகியன அபிவிருத்தி நலகொடைகளை வழங் வேண்டுமென பருத்தித்துறை பிரஜைகள் குழு நிதி, திட்டமிடல் அமைச்சர் திருரொனி டீமெலையும் இலங்கை வங்கி, மக்கள்வங்கி ஆகியனவற்றின் தலைமைப பீடங்களையும கேட்டிருக்கிறது.

## அகதிகள் புனர் வாழ்வு வாரம்

ஜனவரி மாதம் 30 ஆம் திகதி முதல் பெப்ரவரி எட்டாம் திகதி வரையிலான தினங்களை அகதிகள் புனர் வாழ்வுத் தினங்களாக யாழ். மாணவர் பிரதிநிதிகள் குழு ஒழுங்குசெய்துளளது. மேற்படி தினங்களில் ஒவ்வொரு பாடசாலையிலும் நிதி திரட்டுவதில் மாணவர் பிரதிநிதிகள் ஈடுபடுவார்கள்.



## நெஞ்சில் நிறைந்தவர்

நாவலியூர் இளைஞரிடையே செல்வாக்குப் பெற்று அவர்களுக்கு அருந்துணையாயும் ஆருயிர் நண்பனாயும் உற்ற தொரு உடன் பிறப்பாயும் திகழ்ந்த சரவணபவன் ஜெயந்தன் தொழில் வாய்ப்புக்காகப் பிரான்ஸ் சென்றிருந்த போது அகால மரணமடைந்தமை அனைவரையும் ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கி விட்டது.

யாழ் புகையிரத நிலைய அதிபராகப் பணியாற்றும் நாவலியைச் சேர்ந்த சரவணபவன், திருமதி சரவணபவன் தம்பதிகளின் ஏக புதல்வனான ஜெயந்தன் யாழ்ப்பாணக் கல்லூரி கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிகளின் பழைய மாணவராவார் மிக இளைஞராக பிரான்ஸ் சென்று இரு மாதங்களுக்குள் தமது அறையில் ஏற்பட்ட வாயுக்கசிவினால் மூச்சுத்திணறி 22வது வயதில் மரணத்தைத் தழுவினார்.

இவரது மறைவால் தாங்கொணாத் துன்பமடைந்துள்ள பெற்றோர் உற்றார் உறவினர் அனைவருக்கும் உளம் நிறைந்த ஆறுதலையும் அமைதியையும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.


வைத்தியர் தேவை

கிளிநொச்சியிலுள்ள தனியார் வைத்திய நிறுவனத்துக்கு பதிவுசெய்த வைத்தியர் R. M. P உடன் தேவை. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்: குமரன் கிளினிக்
பரந்தன்

தெல்லிப்பளையில

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

G. A. Q., B. A. பாடநெறிகள் – கல்வியாண்டு – 1985

✻ க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில சித்தியடைந்த மாணவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவர்களாகப் பதவு செய்துகொண்டு G. A. Q., B. A பாடநெறிகளைக் கற்கமுடியும்.

✻ விண்ணப்பப் படிவங்களையும மேலதிக விபரங்களையும் தெல்லிப்பளையில் அமைநதுள்ள எமது அலுவலகத்தில் சனி, ஞாயிறு தினஙகளில காலை 9.00-3.00 மணிக்கிடையில நேரில வநது பெற்றுக்கொளளவும.

விண்ணப்ப முடிவுத் திகதி 15 — 2 — 85.
வகுப்புகள் ஆரமபம் 16 — 2 — 85.

விபரங்கட்கு
KEEN'S INSTITUTE
Tellipalai Junction, Tellipalai.

பல்கலைக் கழக (வெளிநிலை) விரிவுரைகள்

கல்வியாண்டு 1985/86

பேராதனை, கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகங்களின் வெளிநிலை பாடநெறிகளான

✻ கலைமாணி ✻ வணிகமாணி (புள்ளிவிபரவியல்)
✻ சட்டமாணி ✻ வணிகமாணி

க. பொ. த உயர்தரம 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள விண்ணப்பிக்கலாம.

விரிவுரைகள 10-2-85ல் ஆரம்பமாகின்றன.

விபரங்களையும விண்ணப்பப் படிவத்தையும ரூபா 5/ செலுத்தி நேரில / தபால மூலம பெறறுக்கொளளலாம.

உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23715.

மாதாந்தம் 36%. வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்
05-02-85 வரை

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

### உதய சிந்தனை

தலைவன் நீதியோடும் நேர்மையோடும் நாட்டை ஆளவேண்டும். தீமைகளை நீக்கி, நன்மைகளைச் செய்து, பொறுமையும் அன்பும் ஆதரவும் உள்ளவனாய் இருக்கவேண்டும், கோபம் இல்லாத தலைவனே மக்களால் போற்றப்படுபவன். - புத்தர்

37, கண்டி வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி: 23336

## இதய ஒலி

2-2-85 சனிக்கிழமை (இரத்தாக்ஷி தை 20)

# 'போலி'களைப் பிடிப்பதும் 'உண்மை'களின் கடமை!

நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்று வரும் கொள்ளைகள், கடத்தல்கள் பற்றிய செய்திகள் அவ்வப்போது பத்திரிகைகளில் இடம்பெறுகின்றன.

ஆனால் தமிழ்ப்பகுதிகளில் இடம்பெறும் இவ்வாறான சம்பவங்கள் மட்டுமே பத்திரிகைகளின் முதற்பக்கத்தைப் பெறும் பெருமையைப் பெற்றவை.

உரிமைகோரி வாதாடும் ஒரு இனத்தின் போராளிகள் இதனை நடத்துவதால், இச்செய்திகள் முக்கியத்துவத்தைப் பெறுகின்றன என்று சிலர் நினைக்கலாம்.

இது மட்டும் காரணமல்ல. அரச வெகுஜனத் தொடர்பு இலாகாக்கள் தமிழ்ப் பகுதி நிகழ்வுகளை மட்டுமே செய்திக் குறிப்புகளாகத் தயாரித்து விநியோகிப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

செய்தித்தணிக்கை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி தமிழ்ப்பகுதிக் கொள்ளைகளும், கடத்தல்களும் என்றுமே தணிக்கைக்குட்படுத்தப்படுவதில்லை.

தமிழ்ப் போராளிகளை வெறும் கொள்ளையர்கள் என்று உலகத்தின் கண்களுக்குப் புட்டுக்காட்ட எத்தனிப்பதே இதற்குக் காரணமாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள், அரசாங்க திணைக்களங்கள் பாடசாலைகள், வங்கிகளில் நடைபெறும் கொள்ளைகள் பற்றிய பல்வேறு செய்திகள், பல்வேறு கோணங்களிலிருந்து எழுதப்பட்டுள்ளன.

ஏதோவொரு நோக்கத்துக்காக நடைபெறும் இந்நடவடிக்கைகள் பற்றி, நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக எதுவுமே தெரிவிப்பதில்லை.

ஆனால், அத்தியாவசிய தேவை சம்பந்தப்பட்ட திணைக்களங்களிலும், மாணவர்களுக்குக் கல்வியை போதிக்கும் பாடசாலைகளிலும் நடைபெற்ற சில கொள்ளைகளை நாம் முன்னரும் வன்மையாகக் கண்டித்திருக்கின்றோம். இப்போதும் கண்டிக்கின்றோம்.

பெயர் குறிப்பிட்டு உரிமைகோராத கொள்ளைகள், சில தனிப்பட்ட, சுயநல, 'போலி'களின் செயலாக இருக்கலாமென்று எண்ணுவதை விட வேறு வழியில்லை.

தற்பொழுது, யாழ்ப்பாணம் மாநகரசபை அலுவலகத்தில் அடுத்தடுத்து நடைபெற்றுவரும் கவலைதரும் சம்பவங்களை இங்கு பதிவுசெய்ய விரும்புகின்றோம்.

கடந்த இரு வருடங்களாக யாழ்ப்பாணம் மாநகரத்துக்கு மேயர், அங்கத்தவர்கள் கிடையாது. ஆணையாளர் நிர்வாகத்தில் மாநகராட்சி நடைபெறுகின்றது.

அரசாங்கத்தின் உதவி வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. உண்மையாகச் சொல்வதானால் அரசிடமிருந்து எந்தவிதமான உதவியுமே கிடைப்பதில்லை.

பொதுமக்களிடமிருந்தும் வரிப்பணத்தை நெருக்கிப் பெற முடியாத பொருளாதாரப் பாதிப்பு இன்று இங்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கிடைக்கும் அற்ப சொற்ப வருவாயை மூலாதாரமாகக் கொண்டு மிக மிக நெருக்கடியிலேயே மாநகர சேவைகள் நடைபெற்று வருகின்றன.

குடிநீர் விநியோகம், மின்சார விநியோகம், சுகாதார சேவை, வீதிப் பராமரிப்பு போன்ற சகல சேவைகளுக்கும் தன் கையை மட்டுமே நம்பியிருக்கும் மாநகர நிர்வாகத்தில், ஒரு மாதத்துக்குள் இரண்டு கொள்ளைகள் நடைபெற்றுள்ளது வேதனைக்குரியது மட்டுமன்றிக் கண்டிக்கப்பட வேண்டியதும் கூட.

இரண்டு வாரத்துக்கு முன்னர் சிற்றூழியர் சம்பளத்தைக் கொள்ளையடித்தார்கள். நேற்று முன்தினம் மின்சாரக் கட்டணச் சேர்வு கொள்ளை போனது.

தமிழ் பகுதியின் விடிவுக்காகப் போராடுபவர்கள், யாழ். மாநகரத்தின் பணத்துடன் விளையாடமாட்டார்கள் என்பது பலரதும் பொதுவான அபிப்பிராயம்.

அப்படியானால் இதனை ஒரு 'தொழிலாக' மேற்கொண்டிருப்பவர்கள் யார்? திட்டமிட்டே ஒரு கோஷ்டி இதனைச் செய்கின்றதா?

சம்பந்தப்பட்ட 'போலி'களைக் கண்டுபிடித்து, யாழ். நகரை அவச்சாவிலிருந்து காப்பாற்றுவது 'உண்மை'யானவர்களின் முன்னுள்ள முக்கிய கடமையாகும்.

## இம்மாதம் 23, 24ல் மொரட்டுவையில்

# சமூக சகோதரத்துவ மாநாடு; சர்வோதய ஆரியரத்ன முயற்சி

(ஏழாலை)

சமூக, சகோதரத்துவ நல்லெண்ண மாநாடு என்ற தலைப்பில் சிறுபான்மை மக்களின் சுய நிர்ணய உரிமைகளை வரையறுத்துக்கொள்ளப் பூரண ஏற்பாடுகளை மேற்கொள்ளச் சிறுபான்மை மக்களின் சமூகநல பொதுத்தாபனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மகாநாடொன்றை இம்மாதம் 23 24, ஆம் தேதிகளில் சர்வோதய அமைப்புத் தலைவர் கலாநிதி ஏ. ரி ஆரியரத்ன கூட்டுகின்றார்.

எதுவித முடிவும் எடுக்கப்படாமல் அண்மையில் முடிந்த சர்வகட்சி மாநாட்டின் எதிரொலி இது எனவும் கருதப்படுகிறது.

அதே வேளையில் கலாநிதி ஆரியரத்ன தமிழில் கையொப்பமிட்டு வடபகுதியிலுள்ள பிரமுகர்கள் பலருக்கும் தனித்தனி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தமிழ் மக்கள் இதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் பிரமுகர்கள் தமது கருத்துக்களை எழுத்து வடிவத்தில் தமக்கு அனுப்பித் தருவதுடன், மாநாட்டில் தவறாது கலந்து கொள்ளவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இத்தகைய மாநாடொன்றைக் கூட்டுமாறு வடபகுதிப் பிரஜைகள் குழுக்காப்பாளர்களில் ஒருவரான திரு. க. சகந்தசாமி தம்மிடம் நேரடியாக வேண்டுகோள் விடுத்ததாகவும், இவ்வேண்டுதலைத் தாம் உடனடியாக ஏற்றுக்கொண்டதாகவும், சர்வோதய இயக்கம் தமிழ் சிங்கள மக்களிடையே ஒரு இணைப்புப் பாலமாக இயங்குவதால் இம்முயற்சியில் ஈடுபடத் தீர்மானித்தது என்றும் தெரிவித்துள்ளார். இம்மாநாடு மொறட்டுவையிலுள்ள சர்வோதய இயக்கத் தலைமையகமான 'தம்சக் மந்திர'வில் நடைபெறவுள்ளதாம்.

இனங்களுக் கிடையேயான சமாதான சகவாழ்வை நிலைநிறுத்தவும், தற்போதுள்ள பதற்றநிலையினைத் தணிக்கவும் இது உதவலாம் எனக் கலாநிதி ஆரியரத்ன கருதுகிறார். எனினும் வடபகுதிப் பிரமுகர்கள் பலரும் இது காலங்கடந்த முயற்சி, எதிர்பார்த்த பலனைத் தருமா என்பது ஐயமே எனச் சந்தேகம் தெரிவிக்கிறார்கள்.

# கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் அரசியலில் ஈடுபடவேண்டும்

(நல்லூர்)

இளைஞர்கள் மத்தியில் இன்று அதிருப்தியும், ஒழுங்கின்மையும் காணப்படுகிறது. இந்த நிலைமை மேலும் வளர்ந்து வருமானால் இளைஞர் சமுதாயத்திற்குப் பேரழிவை உண்டாக்கிவிடும் இந்த அழிவிலிருந்து இளைஞர்களைக் காப்பாற்ற வை. எம். சி. ஏ. ஸ்தாபனம் போன்ற பல ஸ்தாபனங்கள் முன் வந்து இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டும். இளைஞர் சமுதாயத்திற்கு அழிவு வருமானால் அது எமது சமுதாயத்தையே அழித்துவிடும்.

இவ்வாறு உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற உடுவில் வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தின் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த தலைவர் திரு எஸ். எஸ் சி. கனகசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அருட் திரு. ஏ. துரைராசா அடிகளார் பேசுகையில் வை. எம். சி ஏ. ஸ்தாபனக்கிளை 1896ம் ஆண்டில் உடுவிலில் அமைக்கப்பட்டது. இக்கிளை இப்பகுதியில் பல சமூகசேவைகளை ஆற்றி வருகிறது மாணவர்கள் மத்தியில் வை. எம். சி. ஏ. கிளை ஸ்தாபனம் முதன் முதல் யாழ்ப்பாணக் கல்லூரியில் தான் அமைக்கப்பட்டது.

இஸ்தாபனம் சமய வளர்ச்சியையுடையதாக இருந்தாலும், சமூக- பொருளாதார, கல்வி போன்றவற்றின் வளர்ச்சியில் தனது பங்களிப்பைச் செய்து வருகிறது என்று குறிப்பிட்டார்.

திரு. சு ரஞ்சனகராசா பேசுகையில் கிறிஸ்தவ சபைகள் அரசியலில் தம்மை இணைத்துக் கொள்ளக்கூடாது என்ற கருத்துக்கள் பரவலாகப் பேசப்பட்ட பொழுதிலும், அரசியலிலிருந்து நாம ஒதுங்கிக் கொண்டால் அரசாங்கம் எந்த விதமான அநியாயங்களையும் அட்டூழியங்களையும் செய்து நீதியின் பாதையிலிருந்து தவறி ஆட்சி நடத்தி ஆளுகை செய்தால் நாம அதனை ஆதரித்தவர்களாகக் கருதப்படுவோம் இவ்விடயத்தில் நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். பிழையான காரியங்கள் நடக்கும் பொழுது நாம் அதனைச் சுட்டிக் காட்டத் தவறக்கூடாது. இதுவும் கிறிஸ்தவ சமயத்தின் கோட்பாடாக அமைய வேண்டும். ஏனோ, தானோ என்ற மனோநிலை எபமை விட்டு நீங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் பேசுகையில் வை. எம் சி ஏ ஸ்தாபனம், வைய்மன்கிளப், வை. டபிள்யூ சி. ஏ போன்ற ஸ்தாபனங்கள் சமூக சேவையில் அளப்பரிய சேவைகள் ஆற்றிவருகின்றன. ஆபத்து வேளையில் உதவும்கரமாக இவை தொடர்ந்தும் தமது சேவைகளை விஸ்தரிக்க வேண்டும். மக்கள் மத்தியில் தமது சேவைகளை விஸ்தரித்து ஆதரவற்ற, அனாதைகளை ஆதரித்து அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார். சங்கச் செயலாளர் திரு. ஜேம்ஸ் இரத்தினம் நன்றி கூறினார்.

# சைக்கிள் 'நம்பர்பிளேட்' எடுக்க ஐந்து ரூபா மணி ஓடர்!

(புலோலி)

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உப - அலுவலகங்களுக்கு சைக்கிள் நம்பர் பிளேட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்காக நாள் தோறும் பெருந்திரளான மக்கள் படை எடுத்த வண்ணமிருக்கின்றனர்.

ஆனால் சில உப-அலுவலகங்களில் ஐந்து ரூபாவுக்கான மணி ஓடரை எடுத்து வருமாறு கேட்கப்படுகிறது சில உப-அலுவலகங்களில் ஐந்து ரூபா பணமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

சைக்கிள் நம்பர் நம்பர் பிளேட்டைப்பெற்றுக் கொள்வதற்கு ஐந்து ரூபாவுக்கான மணி ஓடரை உப-அலுவலகங்களில் கேட்பதனால் பொது மக்கள் பெரும சிரமப்பட வேண்டியிருப்பதாகவும் எனவே எல்லா உப-அலுவலகங்களிலும் ஐந்து ரூபாவைப்பணமாக ஏற்றுக் கொள்வது பொது மக்களுக்கு நன்மையளிக்குமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சமாதானசபை

(வயாவிளான்)

புன்னாலைகட்டுவன் வடக்குப் பகுதிக்கென புதிய சமாதான சபை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஈவினை, திடற்புலம், புன்னாலைக்கட்டுவன வடக்குப் பகுதிகளில் நடைபெறும் பிரச்சனைகளில் வெளியார் யாரும் தலையிடவிரும்பாத இப்பகுதி மக்கள் தமக்கென ஓர் சமாதான சபையை ஆரம்பித்துள்ளனர்.

# வடபகுதி தபாலகங்களில் முத்திரைகள் கிடையாது

(காரைநகர்)

வடபகுதியில் உள்ள பிரதான தபால் அலுவலகங்கள் பலவற்றிலும் முத்திரைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது.

உப தபாற்கந்தோர்கள் உட்பட பல பிரதான தபாற்கந்தோர்களிலும் அறுபதுசதத்திற்கு மேற்பட்ட முத்திரைகள் எதுவுமே இல்லையெனக் கை விரிக்கப்படுகிறதாம்.

இதனால் வெளிநாடுகளுக்குக் கடிதங்களை அனுப்புவோர் உட்பட வேறு பல தேவைகளுக்காகவும் பெறுமதி வாய்ந்த முத்திரைகளை பயன்படுத்தும பொதுமக்கள் பெரிதும் அங்கலாய்க்கின்றனர்.

## இந்திரா முத்திரை

மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவாக ஒரு விசேட முத்திரை நேற்று வெளியிடப்பட்டுள்ளது இந்திய நாணயத்தில் இரண்டு ரூபா பெறுமதியான இந்த முத்திரையை வெளியிட்டு வைத்த பிரதமர் ராஜீவ்காந்தி உலக அமைதிக்காக ஓங்கிக் குரல் கொடுத்த இந்திராவின் குரலை மக்கள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

சாந்தி - (யாழ்நகர்)
12-1-85 முதல்
10.30, 2.15 மட்டும்
கமல், சுலக்ஷனா, ராதா, தங்கவேலு நடித்த
A. V M இன்
தூங்காதே தம்பி தூங்காதே
(ஈஸ்மன் கலர்)

ஈழமுரசு

## இரு தலை நாம்பன் கன்று மருத்துவபீடத்துக்குச் செல்லும்!

(அச்சுவேலி)

ஒரே உடலில் இரண்டு தலைகளைக் கொண்ட அதிசய மாட்டுக் கன்று ஒன்றை அச்சுவேலி விவசாயி ஒருவரின் பசுமாடு ஈன்றுள்ளது. அச்சுவேலி தெற்கு தோப்பில் உள்ள சீனிவாசகம் சின்னத்துரை என்பவரின் வீட்டில் உள்ள இந்த அதிசய மாட்டுக் கன்றை பல இடங்களிலும் உள்ள பொது மக்கள் பார்வையிட்டுச் செல்கின்றனர். இந்த அதிசய மாட்டுக்கன்றை ஈனுவதற்குத் தாய்ப்பசு பல மணிநேரம் வேதனைப்பட்டதனால் செயற்கை முறை மூலம் கன்றை வெளியே எடுப்பதற்கு உள்ளூர் வைத்தியர்கள் பல மணி நேரம் முயற்சி செய்த போது கன்று இறந்துவிட்டது. வியாழக்கிழமை காலையில் பிறந்த இந்த அதிசய நாம்பன் கன்றின் உடல் தற்பொழுது பழுதடையாமல் வைக்கப்பட்டுள்ளது. இதனை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு வழங்கச் சொந்தக்காரர் உத்தேசித்துள்ளார்.

### அரச அதிபருக்கு மாணவர் மகஜர்:

# ஆகஸ்டில் ஜீ. சி. ஈ. பரீட்சை எடுக்கும் மாணவரை பூஸாவிலிருந்துவிடுவிக்குக!

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஜீ சி ஈ. உயர்தர பரீட்சை எடுக்கவிருக்கும் மாணவர்கள் சிலர் பூஸா ராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி ஊடாக நடவடிக்கை எடுக்குமாறும் யாழ். மாணவர்கள் பிரதிநிதிகள் குழு யாழ். அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி குழுவினால் அனுப்பப்பட்ட மகஜரின் முக்கிய பகுதி வருமாறு:-

கடந்த விடுமுறையின் போது, டிசம்பர் 9ம் திகதி இராணுவத்தின் சோதனையின் போது எமது சக பாடசாலைகளின் மாணவர்கள் ஆகிய யாழ். இந்துக் கல்லூரி ஆனந்தம் செல்வகுமார (இவர் தாய் தந்தையரை இழந்திருக்கும் அனாதை மாணவன்) சம்பத்திரிசியார் கல்லூரி முருகேசு அருளானந்தம் என்னும் மாணவனும் ஆனைக்கோட்டையில் அவரவர்கள் வீடுகளில் வைத்து கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் எவ்வித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற ரீதியில் விடுதலையாகும் தடுப்பு முகாம் கைதிகளின் பெயர்பட்டியலைப் பார்த்து ஏமாற்றம் அடைந்ததனால் தான் இம் மகஜரை தங்கள் மூலமாக ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி தாழ்வுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் அவ்விரு மாணவர்களும் வருகின்ற ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவிருப்பதனால் இவர்களின் கல்வி இராணுவ நடவடிக்கையினால் பாதிக்காது விடுதலை செய்வதுடன் பூஸா முகாமிலிருக்கும் மாணவரை மனிதாபிமான அடிப்படையில் உடன் விடுதலை செய்து பல கஷ்டங்கள் மத்தியிலும் கல்வியே வாழ்க்கைத்துணை என்று வாழுகின்ற யாழ். மாணவ சமுதாயத்தை விரக்தி நிலைக்குத் தள்ளாது இனிமேலும் எந்த மாணவனும் கைது செய்யப்பட்டு இம்சிக்கப்படாதிருக்கக் கூடியதாக பாதுகாப்புத் தரும்படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

## தமிழக மீனவர் மூவர் விடுதலை

அனுராதபுரத்தில் கடந்த ஒருவருடத்திற்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழக மீனவர்களும் நேற்று அனுராதபுரம் உயர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

## மஹோற்சவம்

நகுலேஸ்வரம் கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் 4ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி, பதினைந்து தினங்களுக்கு நடைபெறும்.

## அகதிகள் நிதி சேகரிப்பும் மாணவர் இரத்ததானமும்

வடபகுதியில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் அகதிகளாக இருக்கும் மக்களுக்கு உதவும் முகமாக யாழ். மாணவர்கள் பிரதிநிதிகள் குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும் நிதி சேகரிப்புக்கு ஒவ்வொரு மாணவனும் குறைந்தது ஒரு ரூபாவை அன்பளிப்பாக அளிப்பதுடன் உடைகள் மற்றும் பொருட்களையும் மாணவர் தலைவர்களிடம் கையளிக்கும்படி, யாழ். மாணவர்கள் பிரதிநிதிகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதிபர், ஆசிரியர்களையும் இப்பணிக்கு ஒத்துழைப்பளிக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புகிறவர்கள் தங்களின் பெயரை மாணவர் தலைவர்களின் அறையில் பதிவு செய்து ஒரு சீரான முறையில் இரத்ததானம் செய்வதன் மூலம் இரத்தக் காயத்துடன் போராடிக்கொண்டிருக்கும் அப்பாவி மக்களை காப்பாற்ற முடியும் என்பதனால் இதிலும் மாணவர்கள் முன்னின்று தங்கள் பங்களிப்பை செலுத்தும்படியும் மாணவர்குழு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

## இப்பகுதிகளில் ஊரடங்கு ரத்து

மட்டக்களப்பு மாவட்டத்திலும், திருக்கோவில் அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இதுவரை இருந்துவந்த ஊரடங்குச் சட்டம் நேற்று முதல் ரத்துச் செய்யப்பட்டது.

### நாவாந்துறை பகுதியில்

## மீனவர் உணவு முத்திரைகள் விநியோகத்தில் மோசடி?

(நாவாந்துறை)

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்படும் உணவு முத்திரை நாவாந்துறைப் பகுதியில் மீனவர்களல்லாத சிலருக்கு வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் மீன்பிடித்தலை தொழிலாகக் கொள்ளும் சிலருக்கு வழங்கப்படவில்லை யென்று பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்

உணவு முத்திரை வழங்கும் உத்தியோகஸ்தர் ஒருவர் இது தொடர்பான வாதவாதத்தினால் நேற்று தாக்குதலுக்குள்ளானதாகவும் தெரியவந்துள்ளது.

"வேண்டியவர்கள், வேண்டாதவர்கள்" பார்த்து சிலர் உணவு முத்திரைகளை வழங்கிவருவதாகவும் இப்பகுதியில் பரவலான புகார் கிளம்பியுள்ளது

## பதற்றத்தால் பணம் போனது

(அரியாலை)

சீருடையினர் வருவதாகப் பதற்றமடைந்து ஓடிய ஒருவர் 1800 ரூபாவை இழந்தார் இச்சம்பவம் யாழ்ப்பாணம், 2ம் குறுக்குத் தெருவில் நடைபெற்றது. அடைவு நகையை எடுப்பதற்காகச் சென்ற அரியாலை வாசி ஒருவரே இப்பணத்தை இழந்தவராவார். சம்பவ தினம் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவர், பதற்றமடைந்து ஓடும்பொழுது சைக்கிளால் விழுந்த பொழுதே பணத்தை இழக்கவேண்டி ஏற்பட்டதாம்.

### தொண்டா: அறி..

—1-ஆம் பக்கத் தொடர்

டுள்ளதாகவும், மலையகத்தில் பெரும் தொகையான தோட்டத் தொழிலாளிகளான இளைஞர்கள் பயங்கரவாதிகள் என்ற பெயரில் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவ்விடயங்கள் பற்றியெல்லாம் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படுமென்று தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எம். எஸ் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட இந்திய வம்சாவழியினருக்கான பிரஜாவுரிமை வழங்குதல் விடயம் அமுல் படுத்தப்படாது இழுத்தடிக்கப்படுவது பற்றியும் இன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப் படுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

### படகு சென்றது

நேற்று மாலை யாழ் மீன்பிடிப் பயிற்சி நிலையத்தில் உள்ள படகு ஒன்று இனம் தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டது.

### கடத்தப்பட்ட நான்கு..

—1 ஆம் பக்கத் தொடர்

திற்த பவுஸர்களில் வந்த இளைஞர்கள் வெளிக்கதவைத் திறக்குமாறு கேட்டதாகவும், ஆனால் காவலாளி பயத்தில் கதவைத் திறக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இதனால் இரண்டு இளைஞர்கள் மேலால் பாய்ந்து வந்து துப்பாக்கி முனையில் காவலாளியிடம் திறப்பைப் பறித்து வெளிக்கேற்றைத் திறந்தார்களாம்.

கதவு திறக்கப்பட்டதும் ஒரு பவுஸர் உள்ளே வர அதனைத் தொடர்ந்து ஒரு பச்சை நிற ஜீப்பும் மற்றைய மூன்று பவுசர்களும் உள்ளே வந்தனவாம் கடைசியில் வெள்ளை நிற வான் ஒன்றும் வந்ததாம். ஜீப்பிலும் வானிலும் காக்கிச் சீருடை அணிந்த பலர் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர், இளைஞர்கள் ஆறுதலாக பவுசர்களை நிரப்பிக் கொண்டு இரவு 10 45 மணியளவில் சென்றுவிட்டதாகத் தெரியவருகிறது 4500 கலன் பெற்றோலும் 2500 கலன் டீசலும் கொள்ளையிடப்பட்டனவாம்.

### மட்டுநகர் ..

—1-ஆம் பக்கத் தொடர்

தெரிவித்தனர்.

வாழைச்சேனையிலுள்ளபாடசாலையொன்றுக்கு பஸ்ஸில் சென்ற சில மாணவர்கள் பகிஷ்கரிப்புக்காரர்களால் வழி மறித்து இறக்கப்பட்டு புத்தகங்கள் பறிக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

### பாதிக்கப்பட்ட...

—1-ஆம் பக்கத் தொடர்

யோகத்தர்கள், யாழ் நகரப் பாடசாலை அதிபர்கள் உட்பட மற்றும் பல அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்களின் ஒத்துழைப்பைப் பெற்று, பாடசாலை அதிபர்கள் பரீட்சையை எவ்வித இடையூறுமின்றி நடத்த வழி செய்ய வேண்டும் என்று இங்கு தீர்மானிக்கப்பட்டது.

### பேராதனை மாணவர்...

—1-ஆம் பக்கத் தொடர்

கள் இந்த பஸ்ஸில் பயணம் செய்வதற்குத் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். இவர்களின் பாதுகாப்புக்காக பிரிகேடியர் நளின் செனிவரத்தின. அரசாங்க அதிபர் எம். பஞ்சலிங்கம் ஆகியோரின் கடிதங்களும வழங்கப்படும்.

பெயர்களைப் பதிவு செய்தவர்களும், புதிதாகப் பதிவு செய்பவர்களும் 5-ம் திகதி செவ்வாய்க்கிழமை சட்டத்தரணி எஸ் நாகராஜா (தொலைபேசி: 22187) வுடன் தொடர்புகொண்டு ஊர்ஜிதப் படுத்துமாறும் கேட்கப்படுகின்றனர்.

### பூஸா இளைஞர்...

—1-ஆம் பக்கத் தொடர்

இவர்களை விடுவிப்பதற்கான திகதி எதுவும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆறும் திகதிக்குப் பின்னரே விடுவிக்கப்படலாம்.

கொழும்பிலிருந்து அனுராதபுரம் வரை புகையிரத மூலம் கொண்டுவந்து, அங்கிருந்து பஸ் மூலம் கொண்டுவர ஆலோசிக்கப்படுவதாக பூஸா ராணுவ முகாம் அதிகாரி கோணல பெர்னாண்டோ யாழ். அரசாங்க அதிபரிடம் நேற்றுத் தெரிவித்தார்.


உ

சிவமயம்



## மண்கும்பான் - வெள்ளைப்புற்றடி
### அருள்மிகு ஸ்ரீ வீரசக்தி (வீரஹத்தி) விநாயகர் ஆலய
## மகா கும்பாபிஷேகம்

விநாயகர் அடியார்களே !

மண்கும்பான் கிராமத்தில் வெள்ளைப்புற்றடிப் பதியில் சகல ஆன்ம கோடிகளும் வழிபட்டு உய்யும் வண்ணம் திருக்கோயில் கொண்டு வீற்றிருந்து அருள் நல்கும் ஸ்ரீ வீரசக்தி விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மங்களகரமான இரத்தாக்ஷி வருஷம் தை மாதம் 29ம் நாள் (11-2-1985) சோம வாரமும் ஸப்தமி திதியும் சுவாதி நக்ஷத்திரமும் சுக்கிர ஹோரையும் இடப லக்கினமும் கூடிய பகல் 12 00 மணி முதல் 1.00 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூட்டியிருப்பதால் அடியார்கள் அனைவரும் வந்து தரிசித்து விநாயகப் பெருமானின் பேரருள் பெற்றுய்வார்களாக.

எண்ணெய்க் காப்பு சாத்துதல் : 9-2-1985 காலை 8.00 மணி முதல் 4 மணி வரை.

மண்கும்பான்

இங்ஙனம்
பெருநர் சபை


'ஈழமுரசு' சா ப பா அடவர்டைசிங் அண்ட் ஏஜென்சீஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 2 2 1985 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.